மாலை முரசு

பக்கங்கள் 16 + 2

## பெண்ணொருவர் குத்திப் படுகொலை

### கொழும்பில் கொடூரம்

கொழும்பு, வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெக்னிக்கல் சந்திப் பகுதியில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் குத்திப் படுகொலை 02▶

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 21 திங்கட்கிழமை 07.10.2024 | அதிர்வு 67

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழரசில் இருந்து வெளியேறிய சசிகலா ‘சங்கு’ சின்னத்தில் போட்டி

## வேட்புமனுவிலும் கையெழுத்து



(எஸ்.நிதர்ஷன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட பெண் வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் பாரியார் திருமதி சசிகலா ரவிராஜ் வேட்புமனுவில் இன்று திங்கட்கிழமை கையெழுத்திட்டுள்ளார். 02▶


# தமிழரசின் பொறுப்புகளைத் துறக்கின்றார் மாவை?

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்து பொறுப்புகளையும் துறப்பதற்கு அதன் தலைவர் மாவை சேனாதிராஜா தீர்மானித்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

பதவியைத் துறந்தாலும் அவர் கட்சி உறுப்பினராகத் தொடர்ந்தும் பதவி வகிப்பார் எனவும் கூறப்படுகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பாளர் நியமனங்கள் அவருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமையால் அவர் கட்சியின் அனைத்து பொறுப்புகளையும் துறப்பதற்கு முடிவெடுத்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.





# காட்டு யானை தாக்கி வான் சாரதி மரணம்!

ஹயஸ் வான் ஒன்றை காட்டு யானை தாக்கியதில் வானின் சாரதி உயிரிழந்துள்ளார்.

பொலனறுவை, கிரித்தல – பக்கமுன பிரதான வீதியில் சோமியேல் பகுதியில் பயணித்த வானே காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் இன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பக்கமுன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலனறுவை, பலுகஸ்தமன – சேவாகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய வானின் சாரதியே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிரித்தல – பக்கமுன பிரதான வீதியில் சோமியேல் பகுதியில் காட்டு யானை ஒன்று வீதியைக் கடக்க முற்பட்டபோது அவ்வழியாகப் பயணித்த ஹயஸ் வான் ஒன்று காட்டு யானை மீது மோதியுள்ளது.

பின்னர், இந்தகே காட்டு யானையானது அந்த வானைத் தாக்கியுள்ள நிலையில் வானானது அருகில் உள்ள ஆற்றில் கவிழ்ந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது, வானில் சாரதி மாத்திரமே இருந்துள்ளார் என்றும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலாவுக்குச் சென்ற சிலரை வீட்டில் இறக்கி விட்டு மீண்டும் வீடு நோக்கிப் பயணித்த வானே தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

---

## பெண்ணொருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்ட பெண் 32 வயது மதிக்கத்தக்கவர் எனத் தெரிய வருகின்றது.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான சசிகலா, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார்.

அந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சியே தனக்கு எதிராகச் சதி செய்தது என்று சசிகலா குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், கட்சி மீது கடந்த காலங்களில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி வந்திருந்தார்.

இவ்வாறான நிலையில் இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியில் போட்டியிடுவதற்கு அவர் விண்ணப்பித்திருந்தார். ஆனால், தமிழரசுக் கட்சியில் அவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படவில்லை.

தமிழரசுக் கட்சியின் இந்த வேட்பாளர் தெரிவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அடாவடித்தனமாகப் பல்வேறு குளறுபடிகளைச் செய்து தனக்கு வேண்டியவர்களுக்கு நியமனத்தைக் கொடுத்துள்ளார் என்று சசிகலா நேற்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

"எனக்கு மட்டுமல்லாது கட்சியின் நீண்ட கால உறுப்பினர்கள் பலருக்கும் வேட்பாளர் நியமனம் கொடுக்கபடாமல் தனக்குத் தேவையானவர்களுக்கே சுமந்திரன் நியமனம் கொடுத்துள்ளார்." – என்றும் சசிகலா குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதையடுத்து தமிழரசுக் கட்சியில் இருந்து இன்று காலை வெளியேறிய சசிகலா, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சின்னமான சங்குச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் இன்று பிற்பகல் கையெழுத்திட்டுள்ளார்.




# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழில் இன்று வேட்புமனுத் தாக்கல்

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்பு மனுக்களை இன்று திங்கட்கிழமை கையளித்தனர்.

கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் வேட்புமனுக்களை அவர்கள் தாக்கல் செய்தனர்.

இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுக்களை அவர்கள் தாக்கல் செய்தனர்.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னர் வேட்பாளர்கள் யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.










# தமிழ் மக்களின் முழுமையான ஆதரவு நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கும்!

## தேசிய மக்கள் சக்தி நம்பிக்கை

"தேசிய மக்கள் சக்தியினர் இன வாதிகள் அல்லர். எனவே, நாடாளு மன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் அமோக ஆதரவு கிட்டும். அதன்மூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத் தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது." – என்று தேசிய மக்கள் சக்தி யின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல தெரி வித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"எமது தலைவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எளிமையானவர். தனது நடத்தை மூலம் அவர் அதனை உறுதிப்படுத்தி வருகின்றார். மக்கள் எமக்கு வழங்கியுள்ள பொறுப்பு உரிய வகையில் நிறைவேற்றப்படும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் இருந்து எமக்கு விழாத வாக்குகள் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கும் என உறுதியாக நம்புகின் றோம். அந்த ஆதரவுடன் மூன்றிலிரண் டுப் பெரும்பான்மைப் பலம் கிட்டும் என எதிர்பார்க்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தியினர் இன வாதிகள் அல்லர். அனைவருக்கும் சம உரிமை வழங்கி, இலங்கையர்கள் என்ற நாமத்தை தேசிய மக்கள் சக்தியால்தான் காக்க முடியும் என்பது மக்களுக்கு தெரியும். எனவே, ஜனா திபதித் தேர்தலின்போது தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வாக்குகள் நாடாளுமன்றத் தேர்த லில் நிச்சயம் இரட்டிப்பாகும்." – என் றார்.



# முன்னாள் எம்.பி. சிவசக்தி ஆனந்தன் இம்முறை போட்டியிலிருந்து விலகல்

(கி.வசந்தன்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பாட்டியிடப் பாவேதில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியானது ஜனநாயகத் தேசியக் கூட்டணியில் அங்கத்துவம் வகிப்பதுடன் சங்கு சின்னத்தில் பாட்டியிடுகின்றது.

இதில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வன்னித் தேர்தல் தாகெதியில் பாட்டி யிடுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்கு ஏற்ப இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிடும் முகமாக இம்முறை தேர்தலில் பாட்டேயிடாமல் இருப்பதற்குத் தான் தீர்மானித்துள்ளார் என்று சிவசக்தி ஆனந்தன் அறிவித்துள் ளார்.




# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாழில் வேட்புமனுத் தாக்கல்!

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, முன்னாள் அமைச்சரும் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.







# வடமராட்சி கிழக்கு விபத்தில் முன்னாள் போராளி மரணம்!

யாழ். வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முன்னாள் போராளியான குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, மாமுனைப் பகுதியைச் சேர்ந்த கடற்புலிகளின் முன்னாள் போராளியான புரட்சி என அழைக்கப்படும் நடேசு பரமேஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்று வடக்கு பகுதியில் கடந்த 4ஆம் திகதி இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காலம் பிந்திய ஞானம்

'தமிழ் மக்களின் ஒன்றுபட்ட அபிலாசைகளை வெளிப்படுத்துதல்', 'அதனை சர்வதேசத்திற்கு முரசறைதல்', 'தமிழ் மக்களின் ஆணையை மீண்டும் பிரகடனப்படுத்துதல்' என்றெல்லாம் பல்வேறு முன்னாயத்த அறிவிப்புகளோடு கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் களத்துக்கு வந்த தமிழ் மக்கள் பொதுச்சபை, இப்போது தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் கட்சிகள் செய்கின்ற அரசியல் மாயா ஜாலங்களைப் பார்த்து விசனப்பட்டு போயிருக்கின்றது.

தமிழ் மக்களின் ஒன்றுபட்ட அபிலாசைகளை சர்வதேசத்திற்கு முரசறைதல் என்ற தனது நிலைப்பாட்டை, அதன் சாத்தியம் பற்றிய புரிதல் ஏற்பட்டதன் காரணமாக மாற்றி, பின்னர் 'தேசமாய் ஈழத் தமிழர்களை ஒன்று திரட்டுதல்' என்ற ஒரு குறிக்கோளாகக் காட்டியபடி, தானும் தன் கைவரிசைக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரைக் களம் இறக்க வைத்த தமிழ் மக்கள் பொதுச்சபைக்கு, அந்தத் தேர்தலின் பின்னர் குறுகிய காலத்திற் குள்ளேயே முன்வைத்த காலைப் பின் வாங்கி, தடுமாறித் தனித்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தான் முன்னின்று கூட்டமைத்த பொதுக் கட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் பொதுத்தேர்தல் என்றதும் எவ்வாறு தங்கள் அணுகுமுறைகளை மாற்றிக் கொண்டன என்பதை இப்போது காலம் பிந்தித்தான் பொதுச் சபை உணர முடிந்திருக்கின்றது போலும்.

ஜனாதிபதி தேர்தல் என்பது இலங்கை அரசின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் ஒன்று. அதில் தமிழர் தரப்புக்கு வெற்றி அல்லது பதவி கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதால் பல்வேறு கொள்கைப் பிரகடனங்களை அதனை ஒட்டி அறிவிக்கவும், அப்படி அறிவிக்கப்பட்வற்றுக்குத் தலையாட்டவும் அவற்றுக்கு நேரம் செல்லவில்லை.

ஆனால் பொதுத்தேர்தல் என்று வந்ததும், தமக்கு தமக்கு என எதிர்பார்ப்புகள், பதவி ஆசைகள், தேவைகள் இருப்பதால், பொது நிலைப்பாட்டைத் தூக்கி எறிந்து விட்டு தத்தமது நலன் சார்ந்த வழியிலே அவை புறப்பட்டு விட்டன. இதனால் ஏற்பட்ட விசனத்தையே தமிழ் மக்கள் பொதுச்சபை இப்போது வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கை அம்பலப்படுத்தி நிற்கின்றது.

தமிழ்க் கட்சிகளின் செயல் 'தேசமாய் ஈழத்தமிழர்களை ஒன்றுதிரட்டுதல்' என்ற உன்னத குறிக்கோளுக்கு முற்றிலும் விரோதமானது எனத் தமிழ் மக்கள் பொதுச்சபை தெரிவித்துள்ளது.

அது முற்றிலும் உண்மை.

பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல் போன்ற தமிழ் தரப்புகளும் கட்சிகளும் நேரடியாகப் பதவிகளை, அதிகாரங்களைப் பிடிப்பதற்கான வாய்ப்பு உள்ள தேர்தல்களில் அவற்றின் அணுகுமுறை யாது என்பது தெரியாமல், ஜனாதிபதி தேர்தலையொட்டி வித்தியாசமான நிலைப் பாட்டை எடுக்க முற்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் அணுகுமுறை தான் தவறானது. தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலையொட்டி வளைந்து கொடுத்து, கொள்கை போக்குகளுக்கு இணங்கியவை போல காட்டிய அணுகுமுறையின் உள்ளார்ந்த தாற்பரியத்தை தமிழ் மக்கள் பொதுச்சபை அறிந்து கொள்ளாதமை அல்லது முற்கூட்டியே ஊகித்து உணர்ந்து கொள்ளாதமை இந்த நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது. அவ்வளவுதான்.

ஈழத்தமிழ் மக்களின் விடிவை நோக்கிய பயணத்திற்கும் மக்களை ஒன்று திரட்டி ஒருங்கிணைக்கும் தொலை நோக்குடன்தான் தமிழ் மக்கள் பொதுச் சபை உருவாகியது என்ற அந்த அமைப்பின் உரிமை கோரல் எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. ஆனால் அதில் ஜானாதிபதித் தேர்தலின் போது தமிழ்க் கட்சிகள் இணைந்தமை அந்த நல்ல நோக்கத்தில் அல்ல என்பதை பொதுத் தேர்தலை ஒட்டிய அவற்றின் இப்போதைய நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்கள் பொதுச்சபை காலம் தாழ்த்தியாவது உணர்ந்து கொள்ளும் நிலைமை வந்திருக்கின்றது என்பது உண்மையே.

ஆம், அது ஜனாதிபதித் தேர்தலில் இந்த நலன்கள் தமக்கு இல்லை என்பதால்தான் தமிழ் மக்கள் பொதுச்சபை இழுத்த இழுப்புக்கும் வளைப்புக்கும் அதனுடன் கூட்டு சேர்ந்த தமிழ்க் கட்சிகள் அப்போது இணங்கி வந்தன என்பதை இப்போதாவது தமிழ் மக்கள் பொதுச்சபை புரிந்து கொள்ளத் தவறக் கூடாது.

# தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை ஜே.வி.பி. தீர்க்கும் என நம்பிக்கையில்லை!

## ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)



ஜே.வி.பி. தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை தீர்க்ககும் – அல்லது தீர்த்து விடும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை. அவர்கள் தற்போது தேர்தல் ஆசனங்களைக் கூடுதலாகக் கைப்பற்ற வேண்டும் என்று சில நடவடிக்கைகளை எடுக்கின்றனர்.

இவ்வாறு ரெலோ தலைவரும், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இன்று திங்கட்கிழமை (07) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப் பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய கட்டமைப்பு சார்பாகச் சங்குச் சின்னத்தில் நாங்கள் போட்டி யிடுகின்றோம். வடக்கு – கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வேட்பாளர்களை நாங்கள் தெரிவு செய்துள்ளோம்.

அம்பாறை மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளோம்.

தென்பகுதி மக்கள் அங்குள்ள அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊழலுக்கு எதிராக ஜே.வி.பி. கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அந்த அலை தற்போது எங்களிடம் பரவியுள்ளது.

ஜே.வி.பியுடன் இணைந்து போட்டி யிடுவதில் எமது இளைஞர்கள் ஆர் வத்துடன் இருக்கின்றனர்.

ஜே.வி.பி. தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை தீர்க்கும் அல்லது தீர்த்து விடும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை.

அந்த வகையில் எமது இன பிரச்சி னையாக இருக்கலாம்,எமது நிலங்கள் அபகரிக்கபடுகின்ற விடயங்களாக இருக்கலாம், கடந்த காலங்களில் அனுபவித்த துப்பாக்கிச் சத்தங்கள் இல்லாத எமது தேசத்தை அனுபவிக்கும் நிலைப்பாடுகளை இந்த ஜே.வி.பி. அரசு நிலை நிறுத்துமா? என்கிற கேள்வி இருக்கிறது.– என்றார்.





# அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு போடுமிடத்தில் இறந்த யானை!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு கொட்டும் பகுதியில் இறந்து கிடக்கும் யானை தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.எ

கடந்த சனிக்கிழமை (05) இந்த யானை அப்பகுதியில் குவிந்துள்ள குப்பைகளை உண்ட நிலையில் திடிரென உயிரிழந்திருந்தது.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

யானையின் இறப்புக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. வனஜீவராசிகள் திணைக்களம் இந்த யானையின் மரணம் தொடர்பான காரணத்தை உடற்கூற்று மருத்துவ பரிசோதனையின் பின்னரே அறிய முடியும் என தெரிவித்துள்ளது.

மேலும் இப்பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளுக்குள் காணப்படும் உணசுக் கழிவுகளை உண்ணத் தினந்தோறும் 10 இற்கும் மேற்பட்ட யானைகள் வருகை தருவதுடன் அருகில் உள்ள பொது மக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன. அம்பாறை நகர பகுதி உள்ளிட்ட ஏனைய புற நகர பிரதேசங்களில் இருந்து இந்தப் பகுதிக்குக் குப்பைகள் மாநகர மற்றும் பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு கொட்டப்படுகின்றன.

இலங்கையின் பெருமளவான காட்டு யானைகள் குப்பை மேடுகளை தேடி உணவுக்காக வருகின்றன. தாவர உண்ணியான காட்டு யானைகள், உணவுக் கழிவுகளைப் பொலித்தீன்களுடன் சேர்த்து உண்பதால் இறந்து போகின்றன.





# கல்லடி இக்னேசியஸில் ஆசிரியர, சிறுவர் தினம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி புதுமுகத்து வாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலயம் நடத்திய சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தினக் கொண்டாட்டம் பாடசாலை கேட்போர் கூடத்தில் இன்று திங்கட்கிழமை (07) இடம்பெற்றன.

வித்தியாலய அதிபர் பி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆரம்பத்தில் ஆசிரியர்கள் பாடசாலை நுழைவாயிலிலிருந்து மாணவர்களால் அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து மாணவர்களுக்கிடையே பலூன் ஊதி உடைத்தல், சமநிலையில் நடத்தல், போத்தலில் நீர் நிரப்புதல், காலில் கட்டப்பட்ட பலூனைப் பாதுகாத்தல், சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அடுத்து அரங்கேறிய ஆசிரியர் தின நிகழ்வில் ஆசிரியர்களால் கவிதை, பாடல்கள், கதைகள் நிகழ்த்தப்பட்டன.







# கட்சியிலிருந்து விலக்கப்பட்டோர் உள்ள அணியில் சேரமாட்டோம்!

## அம்பாறையில் இழுபறி நிலவ இதுவே காரணம் என்கிறார் ரிஷாத்

கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் மற்றும் இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் உள்ள கூட்டணியில் இணையப்போவதில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (06) மன்னார், மாந்தை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

கிண்ணியாவைச் சேர்ந்த கட்சியின் உயர்பீட உறுப்பினர் ஒருவர் கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும் இவ்வாறு பலர் உங்களது கட்சியிலிருந்து விலகிச் செல்வதற்கு காரணம் என்ன? எனவும் மற்றும் தனித்தா அல்லது இணைந்தா போட்டியிடுவது? எனக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதி லளித்த தலைவர் ரிஷாத் தெரிவித்தவை வருமாறு,

தவறு செய்தமைக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட சிலர், இன்று தாமாகவே கட்சியிலிருந்து வெளியேறியதாகக் கூறித் திரிகின்றனர். தவறு செய்தவர்கள் உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்படுவர். இவ்வாறு தவறு செய்த மூன்று எம்.பிக்களை எமது கட்சி நீக்கியுள்ளது.

இதுபோலவே, கிண்ணியாவைச் சேர்ந்த ஒருவரையும் நாம் நீக்கியுள்ளோம். இன்று அவர் ரணிலுடன் இணைந் துள்ளார். அது மட்டுமல்ல கட்சியிலிருந்து அவர்தான், வெளியேறினார் என்று ஊடகங்களுக்கு கூறுகிறார். மக்கள் ஆணையை மீறியவர்களுக்கு மக்களே பாடம் புகட்டுவர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது கட்சி அம்பாறை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடும். சில மாவட்டங்களில் தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில்



ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடும். எம்மால் நீக்கப்பட்டவர்களைச் சேர்த்து உருவாக்கப்படும் கூட்டணியில் நாம் சேரமாட்டோம்.

இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்து, ஜனாஸ ாக்களை எரிப்பதற்கு உதவியவர்கள் உள்ள கூட்டணியிலும் எமது கட்சி இணையாது. அம்பாறை மாவட்டத்தில், இவ்விடயம்தான் இழுபறியில் உள்ளது. இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் உள்ள அணியில், நாம் இணையப்போவதில்லை. இவர்களைச் சேர்த்தால் அம்பாறையில் தனித்தே மயில் சின்னத்தில் போட்டியிடுவோம். புத்தளம் மாவட்டத்திலும் இந்த நியதியே பின்பற்றப்படும். இது குறித்து தீர்க்கமான முடிவை எடுக்குமாறு கட்சியின் புத்தளம் மாவட்ட உயர் பீடத்துக்கு அறிவித்துள்ளோம்.- என்றார்.







# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் பல்வேறு உதவிகள்!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடைபெறும் ஆன்மீக நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினர் சிவாநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் முருக வழிபாடு என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரையை வவுனியா தேசிய கலவியியல் கல்லூரி ஓய்வு பெற்ற விரிவுரையாளர் திருமதி விஜயகுமாரி முருகேசம்பிள்ளை நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து உதவித் திட்டங்களாக, அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய கோரிக்கைக்கு அமைவாக, நவராத்திரி விழா போட்டிகளிக்கான பரிசில்கள் வழங்குவதற்கான நிதியாக 20ஆயிரம்ரூபாவழங்கிவைக்கப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பகுதியினரின் கோரிக்கைக்கு அமைவாக, கலாசார ஆய்வுக்கான நிதியாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இதேவேளை கேப்பாப்பிலவு, வற்றாப்பளையை சேர்ந்த, வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி, 04 ம் வட்டாரம், முள்ளியவளையை சேர்ந்த, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன், அச்சுவேலியை சேர்ந்த, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும், முன்னாள் போராளிகள் ஒருவருக்குமாக நான்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.







# இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

கெயார் லங்கா அறக்கட்டளையின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியை அடுத்து இலவச ஆயுள்வேத மருத்துவ முகாமொன்று கெலிவத்தை தோட்டத்தில் நடைபெற்றது.

இதன்போது கெயார் லங்கா அறக்கட்டளையின் ஸ்தாபகப் பணிப்பாளர் அருச்சுனி, பணிப்பாளர் டாக்டர் ரமேஸ்குமார், அதன் உறுப்பினர்கள் மற்றும் தோட்ட முகாமையாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# இஸ்ரேலில் உயிரிழந்தோர் ஞாபகார்த்த மரம் நடுகை

2023 இல் இஸ்ரேலில் அகால மரணமான இலங்கையர் இருவர்களின் நினைவு ஒரு வருட பூர்த்தி தினத்தை முன்னிட்டு இலங்கை - இஸ்ரேலிய நட்புறவு சங்கம் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்தது. இலங்கை சட்ட திணைக் களத்தில் திருமதி சாணிக்கா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

வணக்கத்துக்கு உரிய சோமரத்ன தேரர், ராமச்சந்திர குழுக்கள் பாபு சர்மா ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

ஞாபகார்த்தமாக மரம் நடுகை செய்தனர்.









# விபுலானந்தா மாணவருக்கு உளவளச் செயலமர்வு

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் பயிலும் உயர் வகுப்பு மாணவர்களுக்கான உளவள செயற்பாடு தொடர்பான செயலமர்வு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவரும் சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டாக்டர் தர்மலிங்கம் பிரபாசங்கர் தலைமையிலான வைத்திய குழுவினர் அங்கு அந்த பயிற்சியை நடத்தினர்.

வைத்திய அதிகாரிகளான டாக்டர் நௌபல், டாக்டர் கசுன் ஆகியோர் வளவாளராக செயற்பட்டனர்.

மாணவர்கள் மத்தியில் பரீட்சை காலத்தில் ஏற்படுகின்ற மன அழுத்தங்கள் மற்றும் உளநெருக்கிடைகள் அவற்றை கையாளுகிற வழிமுறைகள் தொடர்பாக விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.





# வேட்பாளர் தெரிவில் தூய்மையான அரசியலைப் பேணுதல் அவசியம்!

## மார்ச் 12 இயக்கம் வலியுறுத்தல்!!

நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது தூய்மையான அரசியலை பேணுதல் வேண்டும். அத்துடன் சில நியாயமான கொள்கைகளையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு மார்ச் 12 இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மார்ச் 12 இயக்கத்தின் செயற்பாட்டாளர்களுக்கும் பவ்ரல் அமைப்பின் கள இணைப்பாளர் சசீஸ்காந்த்துக்கும் இடையில் கே. கலாராஜ் தலைமையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே மார்ச் 12 இயக்கச் செயற்பாட்டாளர்களால் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் சில தகைமைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாகப் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள், குற்றவியல் தவறுகளற்ற, லஞ்ச ஊழலற்ற ஒருவராக இருக்க வேண்டும். மது, மாது, போதைப் பொருள், சூது, ஆகிய சமூக சீரழிவுமிக்க வியாபார நடவடிக்கைகளில் சம்பந்தப்படாதவர்களாக இருக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்காதவர்களாக இருப்பதும் அவசியம்.

சுற்றுச் சூழல் மற்றும் நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிப்பவர்களாகவோ, நாட்டுக்கு குந்தகம் விளைவித்த நிதிசார் ஒப்பந்தங்களின் பங்குதாரராகவோ இருந்திருக்கக் கூடாது.

வேட்பாளர்கள் நியமனம் பத்திரம் தாக்கல் செய்வதற்கு முன்பு அல்லது தாக்கல் செய்த பின்னர், தாம் மார்ச் 12 இயக்கத்தின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வது பற்றி பகிரங்கமாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அதாவது , தாம் கடந்த காலத்தில் மேற்குறிப்பிட்ட முறைகேடான செயல்களை செய்ததில்லை எனவும் அவ்வாறான செயல்களை ஊக்குவிக்கவோ அல்லது உடந்தையாகவோ இருக்கவில்லை எனவும், வருங்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இவ்வாறான செயல்களை செய்யப்போவதில்லை எனவும் இவ்வாறான செயல்களை புரிவோருக்கு உடந்தையாகவோ ஊக்குவிப்பாளராகவோஇருக்கப்போவதில்லை எனவும் பொது மக்களுக்கு இந்த வேட்பாளர்கள் பகிரங்கமாக உறுதியளிக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில் சமூக அரசியல் சார் செயற்பாட்டாளர்கள், பத்திரிகை யாளர்கள் கலந்து கொண்டனர்.



# தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பவர்களாக தமிழ்த்தேசியம் பேசுவோர் மாறுகிறார்கள்!

## பொத்துவில் முன்னாள் தவிசாளர் பார்த்திபன் கவலை!

(வி.ரி. சகாதேவராஜா)

சமகாலத்தில் தமிழ் தேசியம் பற்றிப் பேசுபவர்களே தமிழ் தேசியத்தை சிதைப்பவர்களாக இருக்கிறார்கள். அம்பாறை தமிழ் மக்கள் தொடர்பில் சற்றும் சிந்திக்காது அவர்கள் செயற்படுவது கவலைக்கு உரியது.

பொத்துவில் பிரதேச சபையின் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னாள் உபதவிசாளரும் தொழில் அதிபருமான பெருமாள் பார்த்தீபன் இவ்வாறு தெரிவித்தார்.

சமகால அம்பாறை அரசியல் சூழல் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

இன்று தமிழ்த் தேசியம் அதல பாதாளத்துக்குள் போய்க்கொண்டிருக்கிறது. தலைமைகள் தமக்குள் வேறு



படுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்படுகின்ற ஆபத்து இருக்கின்றது. மக்களுக்காகக் கட்சியே தவிர கட்சிக்காக மக்கள் அல்ல.

எனவே பழையவர்களைத் தவிர்த்து புது இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். இன்றேல் மக்கள் பெரும்பான்மை கட்சியுடன் சேர்ந்து போக நேரிடும்.

கடந்த முறை செய்த தவறை இம்முறையும் செய்யக் கூடாது. மக்கள் மனநிலை வேறு அரசியல்வாதிகளின் மனநிலை வேறாக இருக்கின்றது. எல்லோரும் சேர்ந்துதான் இதற்கு முடிவு கட்ட வேண்டும்.

சிலர் தேசியப் பட்டியலுக்காக அம்பாறையை மைதானமாகப் பயன்படுத்துகின்றார்கள். இவர்களெல்லாம் பிரிந்து இருந்து செயல்பட்டால் நாங்கள் வேலை செய்ய மாட்டோம்.

எமக்கான ஒரேயொரு பிரதிநிதித்துவம். அதற்கு 100 பேர் போட்டி. தேசியம் பேசும் இவர்களால் தமிழ் தேசியம் பாதுகாக்கப்படாது. எனவே இந்த இறுதி நேரத்திலாவது ஒன்றுபடுமாறு அன்பாக அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.- என்றார்.



# நுரைச்சோலை இழந்தையடியில் பீடி இலைகளுடன் ஒருவர் கைது!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி நுரைச்சோலையின் இழந்தையடி கடற்கரை பகுதியில் பீடி இலைகளை கடந்த முற்பட்ட குழுவினரை நுரைச்சோலை பொலிஸார் சுற்றிவளைத்தை அடுத்து அவர்கள் தப்பியோடிய நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (06) நுரைச்சோலை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கலேவெல பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் இவரிடம் இருந்து சுமார் 2500 கிலோ பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி மற்றும் வான் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பீடி இலைகள் ஒரு கோடிக்கு மேல் பெறுமதியானது எனவும் கைப்பற்றப்பட்ட லொறி மற்றும் வான் என்பன மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சுங்க திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




## அம்பாறை, திருமலை மாவட்டங்களில்

# பொதுச் சின்னத்தில் போட்டியிட்டால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும்!

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் நம்பிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

வடக்கு – கிழக்கில் பிரச்சினைக்கு உரிய மாவட்டங்களாகக் கருதப்படும் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில், பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியின் பொதுச் சின்னத்தில் தேர்தலில் நிற்கும் பொழுது மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதிநிதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இன்றைய சமகால தேர்தல் சூழல் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் இக்கட்டான சூழலில் இருக்கின்றன.

தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்திலும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்திலும் இணைந்து போட்டியிட வேண்டும் என்ற சிந்தனை இருக்கிறது. அது வரவேற்புக்கு உரியது. இவ்விரண்டு கட்சிகளும் தனித்தனி சின்னத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கேட்பதை விட இரண்டு மாவட்டங்களிலும் இரண்டில் ஒரு பொதுவான சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டால் இரண்டு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். அதேவேளை ஒரு போனஸ் ஆசனம் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது.

அது வீடாகட்டும், குத்து விளக்காகட்டும் . ஆனால் ஒரு சின்னம் சிறந்தது. அதேவேளை இந்த இரண்டு கூட்டணிக்குள் தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற கட்சிகள் மாத்திரமே இணைக்கப்பட வேண்டும். நாம் கட்டாக இருந்தால் எம்மை அசைக்க முடியாது.

ஜேவிபிக்கு போடுகின்ற வாக்குகள் ஒரு சிங்களவர் வருவதற்கும் , தொலைபேசிக்கு போடப்படுகின்ற வாக்கு ஒரு முஸ்லிம் வருவதற்கும் வழிசமைக்கும். எனவே இந்த வரலாற்று துரோகத்தை எந்தத் தமிழரும் செய்யக்கூடாது.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு இடதுசாரி புதிய அரசு வந்திருக்கிறது. அனைவரும் ஓகோ என்று வரவேற்கிறார்கள். ஜேவிபியின் கடந்த கால செயற்பாடுகளை நாம் அறிவோம். அவர்கள் அவர்களினத்தின் 60,000 இளைஞர்களை கொன்று குவித்தவர்கள். கூடுதலான அரசியல் சொத்தை வீணாக்கியவர்கள். அன்றைய ஜனநாயகத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியவர்கள்.

இன்று சூரன் தலையை மாற்றி வருவது போல் வேறு ஒரு முகத்தோடு தேசிய மக்கள் சக்தியாக வருகிறார்கள் .

எனவே, எந்த விதத்திலும் அவர்களோடு இணைந்து அல்லது அவர்களுக்கு வாக்கு கேட்பது என்பது தமிழர்களுக்கு இழைக்கும் வரலாற்று துரோகமாக பார்க்கப்படும் . எந்த தமிழரும் இதற்கு துணை போகக்கூடாது.

புதிய அரசு வந்ததும் சகல மதங்களுக்கும் சம உரிமை என்று சொல்லப்பட்டது. ஆனால் பௌத்த மதத்திற்கு மாத்திரமே அமைச்சு வழங்கப்பட்டிருக்கின்றது. ஏனைய சமயங்களுக்கு அமைச்சு இல்லை. சிங்கள பேரினவாதம் மீண்டும் தலை தூக்கும் ஆபத்து இருக்கின்றது .

புதிய அரசியல் யாப்பு மூலம் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று சொல்கின்றார்கள். முதலிலே 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுல்படுத்துங்கள். அதுவே எமக்கு போதுமானது.

எனவே புதிய அரசின் சுயரூபத்தை இன்னும் ஆறு மாதங்களில் தெரிந்து கொள்ளலாம். அதுவரை பொறுமையாக இருங்கள்.

எது எப்படியோ, இரு மாவட்டங்களிலும் தமிழ் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அதற்காக எந்த விட்டுக் கொடுப்பையும் வழங்க தயாராக இருக்கின்றேன்.– என்றார்.






# சென்னை விமான சாகச நிகழ்வு; 240 பேர் மயக்கம்; 5 பேர் பலி!

இந்திய விமானப் படையின் 92 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி, மெரினா கடற்கரையில் நேற்று நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சிக்காக 15 லட்சத்துக்கும் மேற்பட்டோர் குவிந்துள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெயில், நெரிசலால் 240 பேர் மயக்கம் அடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெரினாவில் இருந்த தற்காலிக முகாமில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. 93 பேர் மேல் சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி, ஓமந்தூரார், ராயப்பேட்டை அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர். 10 இற்கும் மேற்பட்டோர் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் திருவொற்றியூர் கார்த்திகேயன் (வயது 34), ஆந்திராவை பூர்வீகமாக கொண்ட தினேஷ்குமார் (வயது 37), கொருக்குப்பேட்டை ஜான் பாபு (வயது 56), பெருங்களத்தூர் சீனிவாசன் (வயது 52) ஆகியோர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மெரினா காமராஜர் சாலை அருகே மயங்கி கிடந்த 55 வயது நபர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொது மக்கள் மற்றும் வாகன சாரதிகள் பாதிக்கப்படாமல் இருக்க போக்குவரத்து பொலிஸார் போக்குவரத்தில் மாற்றங்கள் செய்திருந்தனர். குறிப்பாக மெரினா காமராஜர் சாலையில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது. அதற்கு பதிலாக வேறு சாலைகளை பயன்படுத்த பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். ஆனாலும், சென்னையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

விமான சாகச நிகழ்ச்சி தொடங்கியதில் இருந்தே போக்குவரத்து நெரிசல் படிப்படியாக உயர்ந்தது. 11 மணிக்கு தொடங்கிய நிகழ்ச்சி 1 மணிக்கு முடிந்தது. அதன்பின், ஒரே நேரத்தில் பொது மக்கள் கிளம்பியதால் மெரினா காமராஜர் சாலை, சாந்தோம், பட்டினப்பாக்கம், அடையார் வரை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நிகழ்வு முடிந்து நடந்து சென்றவர்கள், வாகனத்தில் சென்றவர்கள் என ஒரே இடத்தில் சந்தித்து நெரிசலில் நகர்ந்து செல்ல முடியாமல் தடுமாறினர். பெற்றோர் தங்கள் குழந்தைகளை பாதுகாப்பாக அழைத்து செல்ல முடியாமல் திணறினர். அதிகளவில் வெயில் வாட்டியதால் குழந்தைகள், சிறுவர்கள், முதியோர் சோர்வடைந்தனர். பலர் மயங்கினர். சிந்தாதிரிப்பேட்டையில் பைக் ஒன்று அதிக வெயில் மற்றும் இன்ஜின் வெப்பத்தால் தீப்பற்றி எரிந்தது. விரைந்து சென்ற தீயணைப்பு படையினர் தீயை அணைத்தனர்.

ஆம்புலன்ஸ் வாகனங்களும் நெரிசலில் சிக்கின. காவல், போக்குவரத்து, ரயில்வே துறைகள் ஒருங்கிணைந்து செயல்படாததே மக்களின் அவதிக்கு காரணம் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ரயில்கள், பஸ்களில் கூட்ட நெரிசலில் படிகளில் தொங்கியபடி ஆபத்தான முறையில் பயணம் செய்த மக்களின் புகைப்படங்கள், காணொலிகளை சமூக வலைதளங்களில் 'மோசமான ஏற்பாடு' என்று தலைப்பிட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை 'டேக்' செய்து பலர் பதிவிட்டு வருகின்றனர். அந்த புகைப்படங்களும், காணொலிகளும் வைரலாகி வருகின்றன.

விமான வான் சாகச நிகழ்ச்சியை கண்டுகளிக்க சென்னை மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து மின்சார ரயில், மெட்ரோ ரயில், பஸ்கள் மூலமாக நேற்றுக் காலை 7 மணி முதலே சென்னை மெரினா கடற்கரை நோக்கி மக்கள் வரத் தொடங்கினர். நேரமாக நேரமாக மக்கள் கூட்டம் படிப்படியாக அதிகரித்தது. காலை 8 மணிக்கு பிறகு, செங்கல்பட்டு - கடற்கரை, திருவள்ளூர்- சென்ட்ரல், வேளச்சேரி - சிந்தாதிரி பேட்டை ஆகிய மார்க்கங்களில் உள்ள பெரும்பாலான ரயில் நிலையங்களில் கூட்டம் அதிகரித்தது.

குறிப்பாக செங்கல்பட்டு- சென்னை கடற்கரை மற்றும் வேளச்சேரி - சிந்தாதிரிப்பேட்டை நோக்கி இயக்கப்பட்ட மின்சார ரயில்களில் கட்டுக்கடங்காத கூட்டம் நிரம்பி வழிந்தது. இதனால் அரைமணி நேரத்துக்கு ஒருமுறை இயக்கப்பட்ட மின்சார ரயில்களில் ஏற முடியாமல் தவித்தனர்.

இதனால், பெரும்பாலானோர் சாகச நிகழ்ச்சியை பார்க்கும் எண்ணத்தை கைவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

## சமாளிக்க முடியாத கூட்டங்களை தவிர்க்க வேண்டும் விமான சாகச நிகழ்ச்சி குறித்து கனிமொழி வருத்தம்

சமாளிக்க முடியாத கூட்டங்கள், இனி கூடுவதையும் தவிர்க்க வேண்டும் என்று கனிமொழி எம்.பி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற இராணுவ விமான சாகச நிகழ்ச்சியை காணவந்த பொதுமக்கள் கூட்ட நெரிசலால் அவதியுற்றதும், வெப்ப நிலையும் அதிகமாக இருந்த நிலையில் 5 பேர் உயிரிழந்த செய்தி மிகுந்த வருத்தமும் வேதனையும் அளிக்கிறது. சமாளிக்க முடியாத கூட்டங்கள், இனி கூடுவதையும் தவிர்க்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.












# வெற்றி நமக்கே!

## இஸ்ரேல் இராணுவ வீரர்களிடம் நெதன்யாகு உறுதி

இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடந்து இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது. இதனை முன்னிட்டு நேற்றைய தினம் லெபனான் எல்லையில் இருக்கும் இஸ்ரேல் இராணுவ முகாம்களை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பார்வையிட்டார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

”வடக்கு எல்லையில் இருக்கும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்களை சந்தித்தேன். அங்கிருந்து சில மீட்டர்கள் தொலைவில் எல்லைக் கோட்டுக்கு அப்பால், அவர்களின் நண்பர்கள், ஹிஸ்புல்லா அமைப்பினர் எங்களுடைய முகாம்களை தாக்குவதற்காக தயார் செய்த உள்கட்டமைப்புகளை தகர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

நான் அவர்களிடம் சொன்னேன்: நீங்கள்தான் வெற்றி நாயகர்கள். நீங்களும் உங்கள் நண்பர்களான இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்களும், காசாவில் உள்ள வீரர்களும் அற்புதங்களை உருவாக்குகிறீர்கள். நீங்கள் சிங்கங்களைப் போன்றவர்கள்.

ஓராண்டுக்கு முன்பு நாம் மிகப்பெரிய தாக்குதலுக்கு உள்ளானோம். கடந்த 12 மாதங்களில் நாம் எதார்த்தத்தை முழுமையாக மாற்றியிருக்கிறோம். நமது எதிரிகளின் மீது நீங்கள் கட்டவிழ்க்கும் தாக்குதலைக் கண்டு ஒட்டுமொத்த உலகமும் சிரிக்கிறது. உங்களுக்கு என்னுடைய வீரவணக்கம். வெற்றியின் தலைமுறையினர் நீங்கள் என்பதை நான் உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன். ஒன்றிணைந்து போராடுவோம். கடவுளின் உதவியால் வெற்றி நமக்கே” – என்று குறிப்பிட்டுள்ளார்.







# காதலுக்கு எதிர்ப்பு

## குடும்ப உறுப்பினர்கள் 13 பேரை கொலை செய்த பாகிஸ்தான் பெண்

பாகிஸ்தானின் சிந்து மாகாணம் – கைபத்கான் புரோகி கிராமத்தில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 பேருக்குக் கடந்த ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி ஒரே நேரத்தில் உடல் நலக் குறைவு ஏற்பட்டது.

அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து 13 பேரும் உயிரிழந்தனர்.

பிரேதப் பரிசோதனையில் அவர்கள் உட்கொண்ட உணவில் விஷம் கலந்திருந்த அதிர்ச்சி தகவல் தெரியவந்தது.

இதுதொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். அதில் திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்தன.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த இளம்பெண் இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார்.



அவரது பெற்றோர் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் அவர்களது காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அந்த இளைஞரைத் திருமணம் செய்து வைக்க மறுத்ததால் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த தனது குடும்பத்தையே கொல்லும் முடிவை எடுத்த அந்த இளம்பெண், இதற்கான திட்டத்தைத் தனது காதலன் யோசனைப்படி அரங்கேற்றியுள்ளார்.

வீட்டில் ரொட்டி சமைக்கப் பயன்படுத்தும் கோதுமை மாவில் விஷத்தைக் கலந்துள்ளார்.

இது தெரியாமல் சம்பவத்தன்று விஷம் கலந்த கோதுமை மாவில் அந்த இளம்பெண்ணின் குடும்பத்தினர், ரொட்டி சமைத்து அதனை உட்கொண்டு அனைவரும் உயிரிழந்தனர்.

இதையடுத்து, அந்த இளம பெண்ணை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் 02

கனடா முரசு

திங்கட்கிழமை 07/10/2024

## கனடாவின் ரொறன்ரோ சிறையில் தாக்குதலுக்கு இலக்காகி கைதி பலி

றெறான்ரோ சிறைச்சாலையில் தாக்குதலுக்கு இலக்காகி கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

69 வயதான கைதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 54 வயதான கைதி ஒருவரே 02



# கனடாவின் மொன்றியாலில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி தாய், மகள் உயிரிழப்பு

**கனடாவின் மொன்றியாலில் இடம் பெற்ற தீ விபத்து சம்பவத்தில் தாய் ஒருவரும் அவரது மகளும் உயிரிழந் துள்ளனர்.**

**பிரான்ஸைச் சேர்ந்த பெண்ணும் அவரது ஏழு வயது மகளும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது.**

இந்த தீ விபத்து சம்பவம் தொடர்பில் மொன்றியால் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

43 வயதான லெனோர் கிராயாடி மற்றும் பரன் டிரைன் கிராயாடி ஆகியோர் இந்த விபத்தில் உயிரிழந்தனர் என பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். இந்த தீ விபத்துக்கான காரணங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இந்த தீ விபத்து சம்பவம் இடம் பெற்ற போது கட்டடத்தில் சுமார் 23 பேர் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்தில் மேலும் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த கட்டடம் 1923 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.










# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

கனடாவில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நயாகரா பகுதியில் உள்ள ஒன்பது உள்ளூர் வர்த்தக நிறுவனங்களுக்குள் புகுந்து 35000 டொலர் மதிப்புள்ள பணம் மற்றும் பொருள்களை திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பெல்ஹாமில் கடந்த மாதம் 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் கடைகளை உடைத்து பிரவேசித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் பாதுகாப்பு பெட்டகத்தை குறி வைத்து செயற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களை அடையாளம் கண்ட பின்னர், கடந்த 3 ஆம் திகதி தேடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




சந்தேக நபர்களிடமிருந்து ஆடைகள், காலணிகள், வாகனங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் ஆகிய வற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

29 வயதான சந்தேகநபர்கள் ஜொனாதன் அன்ட்ரூ மாமோன் மற்றும் ஸ்டீவன் அந்தனி மாமோன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த சகோதரர்களுக்கு எதிராக ஒன்பது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

# கனடாவில் ஹோட்டல் வேலைக்கு நீண்ட வரிசையில் நின்ற இந்தியர்கள்



கனடாவில் உணவு விடுதியில் வெய்ட்டர் மற்றும் சர்வர் வேலைகளுக்கு நீண்ட வரிசையில் இந்திய இளைஞர்கள் காத்திருக்கும் காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது.

கனடாவில் பிராம்டனில் உள்ள உணவு விடுதி ஒன்று, வெய்ட்டர் மற்றும் சர்வர் வேலைக்கு ஆட்கள் தேவை என்று விளம்பரம் வெளியிட்டது.

இதையடுத்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அந்த வேலைக்காக உணவு விடுதி முன் குவிந்தனர். இதில் பெரும்பாலானோர் இந்திய இளைஞர்கள் என்று கூறப்படுகிறது.

# இந்தியாவுக்கு முழுமையான ஆதரவினை வழங்குவோம்

## கனடா அரசாங்கம் அறிவிப்பு

இந்தியாவுக்கு எப்போதும் முழுமையான ஆதரவை வழங்குவோம் என்று கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கனடா தலைநகர் ஒடாவா நகரில் பேசிய அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் டேவிட் மாரிசான், இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து பேசுகையில், “இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை நாங்கள் மதிக்கிறோம். சர்வதேச விடயங்களில் இந்தியா முக்கிய சக்தி யாக வளர்ந்துள்ளது. அதற்கேற் றவாறு கனடாவின் கொள்கை களைச் சீரமைத்து வருகிறோம்.” - என்றார்.

இந்தியா எல்லையில் சீன ஆக்கிரமிப்பு சர்ச்சை, காஷ்மீரில் நடந்துவரும் பயங்கரவாத சம்பவங்கள், சீக்கியர்களுக்கு தனி நாடு கோரும் காலிஸ்தான் பிரிவினைவாதம் உள்ளிட்ட விவகாரங்களை முன்வைத்து கனடா இந்த கருத்தைத் தெரிவித்துள்ளது.

முன்னதாக மூன்று மாதங்களுக்கு முன்பு கனடாவில் வைத்து காலிஸ்தான் பிரி வினைவாதியான நிஜ்ஜார் கொல்லப்பட்ட விடயத்தில் இந்திய அரசாங்கத்திற்குத் தொடர்பு உள்ளது என அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியிருந்தார்.

இதனால் கானடா - இந்தியா இடையே உரசல் போக்கு நிலவி வந்தது குறிப்பிட்டத்தக்கது.



## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த கைதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

